


**10. 01. 2025**

**தலைப்புச் செய்திகள்**

1. **இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ் ரயில்களுக்கான** சக்கரம் தயாரிக்கும் பணிகளை மத்திய அரசு உள்நாட்டிலேயே மேற்கொள்ளும் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

2. **வளர்ச்சியடைந்த பாரத இலக்கை நோக்கி** நம்நாடு வேகமாக முன்னேறி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்

3. **ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கு அடுத்தமாதம் 5-ம்** தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

4. **பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு** தண்டனையை அதிகரிக்க வகைசெய்யும் சட்டத்திருத்த மசோதா தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

5. **தோஹாவில் சர்வதேச டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர்** காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா - சீனா வீராங்கணையை தற்போது எதிர்கொண்டுள்ளார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

**அஸ்வினி வைஷ்ணவ்**

**இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின்கீழ் தனியார்** துறையுடன் இணைந்து ரயில்களுக்கான சக்கரம் தயாரிக்கும் பணிகளை அடுத்த ஆண்டிலிருந்து மத்தியஅரசு உள்நாட்டிலேயே தொடங்கும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் புதுவயல் கிராமத்தில் ரயில் சக்கரம் தயாரிக்கும் தொழிற்சாலையை இன்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், எதிர்காலத்தில் 80 ஆயிரம் உயர் சக்தி திறன் கொண்ட சக்கரங்கள் ரயில்வே துறைக்கு தேவைப்படுவதாக குறிப்பிட்டார்.

சுயசார்பு பாரத திட்டத்தின் கீழ் உலகத்தரம் வாய்ந்த பொருட்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் இந்த சக்கரங்கள் நம்நாட்டிலேயே தயாரிக்கப்படும் என்றார்

நாம்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் இச்சக்கரங்கள், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் என்று அமைச்சர் கூறினார்.

முன்னதாக சென்னை பெரம்பூர் ஒருங்கிணைந்த ரயில்பெட்டி தொழிற்சாலையில் ஆய்வு செய்து பேசிய அமைச்சர் நடுத்தர மற்றும் குறைந்த வருவாய் பிரிவினருக்கு தரமான ரயில்சேவையை வந்தே பாரத் ரயில்கள் வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

ரயில்வேயில் அம்ரித் பாரத் இயக்கத்தின் 2-வது கட்ட பணிகள் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்

அம்ரித் பாரத் ரயில்பெட்டிகளில் பயணிகளின் வசதி மற்றும் பாதுகாப்பிற்காக 12 முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

படுக்கை வசதியுடன் கூடிய வந்தே பாரத் ரயிலையும் அமைச்சர் பார்வையிட்டார்

சர்வதேச நிபுணர்களின் அறிவுரைக்கு ஏற்ப பாம்பனில் நவீன வடிவமைப்புடன் கூடிய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**வளர்ச்சியடைந்த பாரத இலக்கு** பாதையில் இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்

கேரள மாநிலம் கொல்லம் மேல்நிலைப்பள்ளியில் மரக்கன்றுகள் நடும் விழாவை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், அரசின் கொள்கைகள் மற்றும் திட்டங்களால் இந்த வளர்ச்சி சாத்தியமானதாக குறிப்பிட்டார்.

சுற்றுச்சூழல் மற்றும் உயிரி பன்முகத்தன்மையை பேண அரசு அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி துவக்கி வைத்த அன்னையில் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டத்தின் மூலம், பசுமை முன்னெடுத்துச் செல்லப்படுவதோடு, தூய்மையான சுற்றுச்சூழல் உறுதி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

2070-ஆம் ஆண்டிற்குள் கரியமிலவாயு வெளியேற்றத்தை முற்றிலும் நிறுத்துவதற்கான நீண்டகால செயல்பாட்டை அரசு வகுத்துள்ளதாக டாக்டர் எல்.முருகன் எடுத்துரைத்தார்.

2 நாள் பயணமாக கேரள மாநிலம் சென்றுள்ள அமைச்சர், தூர்தர்ஷன் மற்றும் ஆகாஷவாணி உள்ளிட்ட ஊடக பிரிவுகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்கிறார்

❖❖❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**ஒடிஷா மாநிலம் புபனேஸ்வரில் நடைபெறும் 18-வது** வெளிநாடுவாழ் இந்தியர்கள் மாநாட்டின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு இன்று உரை நிகழ்த்துகிறார்

இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக புபனேஸ்வர் சென்ற குடியரசு தலைவரை, மத்திய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

கைவினைஞர்களின் பல்வேறு உற்பத்தி பொருட்கள் அடங்கிய அரங்குகளின் கண்காட்சியை குடியரசு தலைவர் பார்வையிட்டார்.

சமூக சேவை மனிதநேயம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் சிறப்பாக பங்காற்றிய வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு விருதுகளை வழங்கி குடியரசு தலைவர் கவுரவிக்கிறார்

❖❖❖❖❖❖❖❖❖

**இடைத்தேர்தல்**

**டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு** அடுத்தமாதம் 5-ம் தேதி நடைபெறும் ஒரேகட்ட தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடப்படுவதை தொடர்ந்து வேட்பு மனுதாக்கல் இன்று தொடங்கியது

**இத்துடன் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதிக்கும்** அடுத்தமாதம் 5-ம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும் இன்று தொடங்கியது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 17-ம் தேதி வரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வரும் 18-ம் தேதி அவை பரிசீலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற வரும் 20-ம் தேதி கடைசிநாளாகும்.

இதனிடையே தமிழ்நாட்டில் பொங்கல் விடுமுறையை முன்னிட்டு இன்றும், 13 மற்றும் 17 தேதிகளில் மட்டுமே வேட்புமனு தாக்கல் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குகள் அடுத்த மாதம் 8-ம் தேதி எண்ணப்படுகின்றன

❖❖❖❖❖❖❖❖

**சட்டப்பேரவை - முதலமைச்சர்**

**பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான** குற்றங்களில் தண்டனையை அதிகரிக்கச் செய்யும் சட்டத்திருத்த மசோதா இன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது.

இம்மசோதாவை பேரவையில் தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், பெண்களுக்கு எதிரான குற்ற செயல்களில் ஈடுபடுவோர் இரும்புகரம் கொண்டு அடக்கப்படுவார்கள் என்று குறிப்பிட்டார்.

பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தமிழகம் திகழ்வதாகவும் அவர் கூறினார்.

**.. வாய்ஸ் ..**

பாலியல் குற்றங்களில் தொடர்ந்து ஈடுபடும் குற்றவாளிகளுக்கு 14 ஆண்டுகளுக்கு குறையாமல் சிறைதண்டனை அல்லது மரண தண்டனை விதிக்க இம்மசோதா வகை செய்கிறது.

பெண்களை பின்தொடர்வோர் மீது 5 ஆண்டுகள் ஜாமினில் வெளிவர முடியாதபடி கடுங்காவல் தண்டனை விதிக்கவும் இந்த சட்டத்திருத்தம் வகை செய்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**கே.என். நேரு**

**தமிழ்நாட்டில் தூய்மை பணியாளர்களுக்கு நவீன** கருவிகள் வழங்கப்பட்டு தொழில் முனைவோராக மேம்படுத்துவதற்கான திட்டம் செயல்படுத்தப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. **K.N.** நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், இதன் மூலம் அவர்களுக்கு நிரந்தர வருவாய் கிடைத்து வருவதாகவும், 7 ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் மானியம் வழங்க வழி வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

வடசென்னை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் சென்னை திரு.வி.க. நகரில், கழிவுநீர் கால்வாய் சீரமைக்கும் திட்டம் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

**பொன்முடி – வனம்**

**காப்பு காடுகளிலிருந்து, 3 கிலோமீட்டர்** துாரத்திற்கு வெளியே வரும் காட்டுப்பன்றிகளை சுட்டுக்கொல்ல, விவசாயிகளுக்கு அனுமதி அளிப்பது குறித்து, பரிசீலிக்கப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் வனவிலங்குகளால், பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு இன்று பதில் அளித்து பேசியஅவர், தற்போது அந்த அதிகாரம் வனத்துறை அதிகாரிகளுக்கு மட்டுமே என்றார்.

வனவிலங்குகளால் உயிரிழப்போரின் குடும்பத்தினருக்கு பத்து லட்ச ரூபாய் நிதிஉதவி வழங்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

**கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள் :**

**சென்னை மாநகராட்சியில்** புதைவழி மின்தடம் பணிகள் நடைபெற்று வருவதாக மாநில மின்துறை அமைச்சர் திரு. செந்தில் பாலாஜி கேள்வி நேரத்தின் போது தெரிவித்தார்.

சட்டப்பேரவயில் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், சேலம் மாவட்டத்தில் புதிதாக 6 துணைமின் நிலையங்கள் அமைக்கப்படும் என்றார்

ஏற்காடு பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார்.

**போக்குவரத்து நெரிசலை தவிர்க்க மும்பையில்** உள்ளதை போல அடல் சேதுபாலம் தமிழ்நாட்டில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு கேள்வி ஒன்றிற்கு பதிலளித்தார்.

முதல்கட்டமாக களங்கரை விளக்கம் முதல் நீலாங்கரை வரை கடல் வழியாக பாலம் அமைக்க திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

**தமிழ்நாட்டில் வரும் ஏப்ரல் மாதம் முதல் 500 புதிய** மின் பேருந்துகள் பயன்பாட்டிற்கு வரவுள்ளதாக மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

பேரவையில் இதனை தெரிவித்த அவர், இதுவரை 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய பேருந்துகள் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

**ஸ்ரீரங்கம்**

**வைகுண்ட ஏகாதசி பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான** பரமபதவாசல் திறப்பு இன்று வைணவ ஆலயங்களில் பக்தி சிரத்தையுடன் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

108 வைணவ திருத்தலங்களில் முதன்மையானதும், பூலோக வைகுண்டம் என்றும் போற்றப்படும் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோவிலில் இன்று மணி 5.16க்கு நம்பெருமாள்ரத்தின அங்கி, பாண்டியன் கொண்டை, கிளிமாலை உள்ளிட்ட திருவாபரணங்களுடன் பரமபதவாசல் எழுந்தருளியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

மாநிலம் முழுவதிலுமுள்ள சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி, திருவாரூர் ராஜகோபாலசுவாமி, திருவள்ளூர் வைத்யவீரராகவ பெருமாள், மாமல்லபுரம் ஸ்ரீ தல சயன பெருமாள், உள்ளிட்ட வைணவ திருத்தலங்களிலும் சொர்க்கவாசல் திறப்பு இன்று கோலாகலமாக நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

சிவகங்கை வாய்ஸ்

சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பாரம்பரிய முறைப்படி பொங்கல் விழா நடைபெற்றதாக, மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் மரியா தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

**நாகை**

நாகை மாவட்டத்தில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழாவையொட்டி தலைக்கவசம் அணிந்து இருசக்கர விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் இன்று தொடங்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்..

.. வாய்ஸ் ..

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில் 31 இடங்களில் நெல்** கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

**நீலகிரி** மாவட்டத்தில் குன்னூர் - மேட்டுப்பாளையம் தேசிய நெடுஞ்சாலையில் அருவியில் பாறையின் மேல் இருந்து சறுக்கி விழுந்த பெண் யானை உயிரிழந்தது.

**புதுக்கோட்டை** மாவட்டத்தில் சாதனை புரிந்த திருநங்கைகளை கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் விருதிற்கு தகுதி வாய்ந்தோர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **அருணா** தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற உள்ள புத்தக திருவிழாவிற்கான சிறந்த வாசகத்திற்கான போட்டியில் விருப்பமுடையோர் பங்கேற்குமாறு, ஆட்சித்தலைவர் கிரேஸ் பச்சாவ் கூறியுள்ளார்.

**காஞ்சிபுரம்** மாவட்டத்தில் புதிய தொழில்பள்ளிகளை தொடங்கவும், அங்கீகாரத்தை புதுப்பிக்கவும் விண்ணப்பிங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

Formatted: Centered

**வானிலை**

**வங்கக்கடல் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு** சுழற்சி காரணமாக நாளைமறுநாள் தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை புதுக்கோட்டை உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது

கடலோர தமிழகத்தில் இன்றும், நாளையும் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும், உள்தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.

தென் தமிழகம், மன்னார் வளைகுடா அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும என்பதால் மீனவர்கள் இன்றுமுதல் 3 நாட்களுக்கு இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

Formatted: Centered

**டேபிள் டென்னிஸ்**

தோஹாவில் நடைபெறும் சர்வதேச டேபிள் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்ரீஜா அகுலா - சீனாவின் **டியானிக்யான்-ஐ** தற்போது எதிர்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ராஜ்கோட்டில் நடைபெறும் இந்தியாவிற்கு எதிரான** முதலாவது ஒருநாள் சர்வதேச மகளிர் கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்யும் அயர்லாந்து சற்றுமுன் 42 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 189 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**